# தி.மு.க.வில் காலந்தோறும் நிகழ்ந்த மறுசீரமைப்புகள்!

**நேற்றைய தொடர்ச்சி**

1969 ஜுலையில் கழக சட்டத்திட்டப்படி 'தலைவர்' பொறுப்பு நடைமுறைக்கு வந்தது. தலைமைக் கழக நிர்வாகிகளில் மட்டுமே தலைவர் இடம் பெற்றார். மாவட்டக் கழகம் முதல் கிளைக் கழகம் வரை 'அவைத் தலைவர்' பொறுப்பே இருந்து வருகிறது. இந்தக் கட்டுரையாளர் இந்த முரண்பாட்டை விளக்குகிற கடிதம் ஒன்றை எழுதி அப்போதைய பொதுக்குழு உறுப்பினர் மயிலை எஸ்.வி.வேலு அவர்களிடம் தலைமையிடம் கொடுக்குமாறு கேட்டுக் கொண்டார். கடிதத்தைப் படித்துப் பார்த்த தலைவர், புன்னகை ஒன்றையே பதிலாகத் தந்தார் என்று எஸ்.பி.வேலு என்னிடம் தெரிவித்தார். இக் கடிதம் சிதம்பரம் பொதுக்குழுவில் தலைவரிடம் சேர்பிக்கப் பட்டது. என் விழைவு தலைமை முதல் கிளைக் கழகம் வரை 'தலைவர்' பொறுப்பு அமைதல் வேண்டும் என்பதே. இக்கருத்துதான் அக்கடிதத்தில் இடம் பெற்றது.

அறிஞர் அண்ணாவின் மறைவிற்குப் பிறகு மாநில சுயாட்சிக் கொள்கை விதி 3 இல் கோட்பாடு எனும் தலைப்பின் கீழ் இணைக்கப்பட்டுள்ளது. விதி 2 நோக்கம் எனும் தலைப்பின் கீழ், அண்ணாவின் திருத்தத்தோடு அப்படியே இடம் பெற்று இருக்கிறது. விதி2,3 இல் அறிஞர் அண்ணாவின் செயற் குறிப்பு நினைவு கூரப்பட்டுள்ளது. அது இன்று வரையும் தொடருகிறது.

புரட்சி நடிகர் எம்.ஜி.ஆர். மீது கழகம் ஒழுங்கு நடவடிக்கை எடுத்த காலகட்டத்தில் கழகப் பொதுக்குழுவில் 310 உறுப்பினர்கள் இடம் பெற்று இருந்தனர். அப்போது செயற்குழு உறுப்பினர்கள் 26பேர். 1972 அக்டோபர் மாத நிலைமை இது!

1977 ஏப்ரலில் கழகத்தின் தலைவர் மற்றும் பொதுச்செயலாளர் தம் பொறுப்புகளிலிருந்து விலகினர். தலைவர் கலைஞர்; பொதுச்செயலாளர் நாவலர், கழக முன்னணியினரால்-பேராசிரியர் க.அன்பழகன் போன்றவர்களால் இருவருக்குமிடையே சமரசம் மேற்கொள்ளப்பட்டது. சமரசம் 4 நாள்களே நீடித்தது. நாவலர் தலைமையில் தனி அணி ஒன்று பிரிந்தது. தி.மு.கழகத்தில் நாவலர் இருந்த பொதுச் செயலாளர் இடத்திற்கு பேராசிரியர் வந்தார். எஸ்.ஜே.சாதிக் பாட்சா பொருளாளர் ஆனார்.

இக்கட்டத்தில் 566 பொதுக்குழு உறுப்பினர்கள் இருந்தனர். பெரும்பாலும் பொதுக்குழு கூடுகிற போது, சிறப்பு அழைப்பாளர்கள் இடம் பெறுவது உண்டு. பொதுச் செயலாளருக்கு நியமன பொதுக்குழு உறுப்பினர்களையும் செயற்குழு உறுப்பினர்களையும் நியமிக்கிற அதிகாரம் உண்டு. தஞ்சையில் 24.07.1977இல் கூடிய பொதுக்குழு தலைவர், பொதுச்செயலாளர் குறித்து ஒரு சட்டத் திருத்தத்தைக் கொண்டு வந்தது. தலைவரோ, பொதுச் செயலாளரோ பொறுப்பிலிருந்து விலகி விட்டால் பொதுக்குழுவின் பொறுப்பு என்ன என்பதை அறுதியிட்டு கூறுகிற வகையில் கழகச் சட்டத் திட்டத்தில் திருத்தங்கள் செய்யப்பட்டன.

மு.க.ஸ்டாலின் பொருளாளராக இருந்த போதே 2017 ஆம் ஆண்டு 'செயல் தலைவர்' எனும் பொறுப்பு உருவாக்கப்பட்டு செயல்பட்டு வந்தார். இதற்கு முன்பு 'செயல் தலைவர்' எனும் பொறுப்பு தி.மு.கழகத்தில் இருந்தது இல்லை. தலைவர் கலைஞர் உடல் நலம் குன்றிய நிலையில் கழக நடவடிக்கைகளில் ஈடுபடமுடியவில்லை. அதனால் ஸ்டாலின் 'செயல் தலைவர்' ஆனார். அதற்காக விதிகள் திருத்தப்பட்டன. 2018இல் தலைவர் கலைஞர் மறைவெய்தியதற்குப் பின்னர் ஸ்டாலின் பொதுக்குழுவால் முறைப்படி கழகத் தலைவராகத் தேர்ந்தெடுக்கப்பட்டார். இந்நிகழ்வுக்கு முன்னரே 'செயல் தலைவர்' பொறுப்பு பொதுக்குழுவில் நிறைவேற்றப்பட்ட தீர்மானத்தின் மூலம் ரத்து செய்யப் பட்டுவிட்டது.

இப்போது தலைமைக் கழகத்தில் தலைவர், பொதுச்செயலாளர், பொருளாளர், முதன்மைச் செயலாளர், துணைப்பொதுச்செயலாளர்கள்-7, அமைப்புச்செயலாளர்-1, இணை அமைப்புச் செயலாளர் 1, துணை அமைப்புச் செயலாளர்கள்-2, உயர்நிலை செயல்திட்டக் குழுவினர்-29, நிர்வாகக்குழு மற்றும் செயற்குழு உறுப்பினர்கள் தேர்வு 258, பொதுக்குழு உறுப்பினர்கள் (தேர்வு)-547, கழகச் சார்பு அணிகள் மற்றும் அணிச் செயலாளர்கள்-25, (2020ஆம் ஆண்டு) சட்டத்திட்டப் புத்தகத்தில் 18 அணிகள் இருக்கின்றன. மாவட்டக் கழகங்கள் முதல் கிளைக் கழகங்கள் வரை அதற்குரிய எண்ணிக்கைகளின் அடிப்படையில் தலைமை இயங்குவதைப் போலவே இயங்குகின்றன. தலைமை நிர்வாகக் குழுவும் சட்டத் திட்டத்தில் இடம்பெற்றிருக்கிறது.

அண்மையில் நடந்த (2026 ஏப்ரல்) தமிழகச் சட்டமன்றத் தேர்தல் தி.மு.க. தனது வாக்கு வங்கியில் 13.5சதவிகிதத்தை இழந்தது. ஸ்டாலின் தலைமையில் பல சாதனைகளை மக்கள் நலத்திட்டங்களை நிறைவேற்றிய கழக அரசு ஆட்சி அதிகாரத்தை இழந்தது. அதுவும் எந்தவித அரசியல் பின்னணியும் அமைப்பு பலம் இல்லாத ஒரு தனி மனிதனை நம்பி தமிழக மக்கள் வாக்குகளை அளித்தனர். இது அரசியல் உணர்ந்த, அறிந்த எல்லாத் தரப்பினரிடமும் அதிர்ச்சியை உருவாக்கியது. இதனால் தி.மு.க. அமைப்பு ரீதியாக மாறுதல்களைச் செய்ய கழக மறுசீரமைப்பு ஆலோசனைக் குழுவை நியமித்தது. ஏராளமான கருத்துரைகளைத் தி.மு.க. அதன் தேர்தல் சம்பந்தமாக மக்களிடமிருந்து வரப்பெற்றது. ஆலோசனைக் குழுவினரும் அதன் முதல் கட்ட அறிக்கையை வழங்கி விட்டனர்.

அதன் அடிப்படையில் 22.08.2026 ஆம் தேதியன்று அண்ணா அறிவாலயத்தில் கழகச் செயற்குழுக் கூட்டம் நடைபெற்றது. இந்தக் கூட்டத்தில் 9 தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன. முக்கியமாக 16-ஆவது கழகத் தேர்தலை அந்தச் செயற்குழு அறிவித்தது. கழகத் தோழர் ஒருவர் கழகப் பொறுப்பு எத்தனை முறை வகிக்கலாம் என்பதை நிர்ணயம் செய்தும் அதற்கான வயது வரம்புகளை நிர்ணயித்தும் தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன. அவற்றைச் செயல்படுத்தும் விதமாக முதல் கட்டமாக 110 மாவட்டங்களைக் கழகத்தின் நிர்வாக வசதிக்காக அமைக்கப்பட்டு அதற்கான தலைமைக் கழக பிரதிநிதிகளும் அறிவிக்கப்பட்டுவிட்டனர். பணிகளும் தொடங்கப்பட்டு விட்டன.

இதுவரை கழகத்தில் எந்தக் காலக்கட்டத்திலும் மேற்கொள்ளப்படாத மறு சீரமைப்புப் பணிகள் கழகத்தில் தொடங்கிவிட்டன. இதனை கிளைக் கழகம் முதல் தலைமைக் கழகம் வரை நிறைவேற்றி ஒரு புதிய பாய்ச்சலைக் கழகம் ஏற்படுத்தத் தொடங்கி விட்டது. இதன் மூலம் கழகம் மேலும் முன் செல்ல-படை நடை நடத்த தலைமைக் கழக ஆணையைச் செயல்படுத்த முன்னணி வீரர்கள் களப்பணியில் இறங்கி விட்டார்கள்.

இக்கட்டுரையில் நான் எடுத்துக் காட்டியுள்ள சீரமைப்புப் பணிகள் அந்தந்தக் காலத்திற்கு ஏற்ப சீரமைப்புகளைக் கழகம் செய்து கொண்டே வந்தது. இப்போதைய சீரமைப்புப் பணிகள் இன்றைய தேவைகளாக இருக்கின்றன. அவசியங்களாகப் படுகின்றன. இது தலைமையின் விருப்பம் இல்லை. காலத்தின் கட்டாயமாக ஆகிவிட்டிருக்கிறது. ஆகவேதான் மறுசீரமைப்பு மேற்கொள்ளப்படுகிறது. ஓர்



**க.திருநாவுக்கரசு**
திராவிட இயக்க
ஆய்வாளர்

ஆய்வாளர் என்னிடம், இந்த மறுசீரமைப்பு தேர்தலை மட்டும் நோக்கமாகக் கொண்டு அறிவிக்கப்படுகிறதே, இது சரியா?" என்றார்.

நான் அதற்கு விடை சொன்னேன். தி.மு.க. பார்வைக்கு ஓர்அரசியல் கட்சியாய் தோற்றமளிக்கிறது. தி.மு.க.வின் அரசியல் கோட்பாடுகள் தேர்தலை மட்டுமே குறிக்கோளாகக் கொண்டவை இல்லை. அது அரசியல் கட்சி மட்டுமில்லை. அது ஒரு சமூக, பண்பாட்டு, கலாச்சார இயக்கமாகும். அதனை அரசியல் அதிகாரத்தின் மூலம் சாதித்துக் கொள்ளவே தமிழக மக்களுக்குப் பணியாற்றாவே தேர்தலின் மூலம் அரசியல் அதிகாரத்தை விழைகிறது. கடந்த 70 ஆண்டுகளுக்கும் மேலாக அந்தப் பணியைச் செய்து கொண்டு கழகம் முன்னேறிக் கொண்டே இருக்கிறது. தி.மு.க.வுக்கு அதன் கொள்கை குறிக்கோள்-கோட்பாடுகளை நிறைவேற்ற தேர்தலை அடிப்படையாகக் கொண்ட அரசியல் அதிகாரம் இதற்காகத்தான் தேவைப்படுகிறது. அதன்வழி கழக அமைப்புகள் இயங்குவதும் அமைப்புப் பணிகளை மேற்கொள்வதும் இயல்பானஒன்றே. எனவே தேர்தலை மட்டுமே நோக்கமாகக் கொண்ட கட்சி தி.மு.கழகமன்று"

அறிஞர் அண்ணா, ஜனநாயகத்தை அது ஓர் அரசியல் அமைப்புமுறை மட்டுமல்ல, அது ஒரு வாழ்க்கை நெறி என்று கூறிச் சென்று இருக்கிறார். அந்தத் தேர்தல் ஜனநாயக நெறி முறைகளையே தி.மு.க. செழுமையாக்கி அரசியலில் படை நடையை நடத்துகிறது. மேலும் இன்றைய ஜென்சி, செயற்கை நுண்ணறிவு, இன்ஸ்டா கிராம், தகவல் தொழில்நுட்ப அரசியல் ஆகியவற்றினுக்கு அறைகூவல் விடுத்து வருகிறது. தி.மு.கழகத்தின அமைப்பு மேலும் காலத்திற்கேற்றபடி பலப்படுத்த மறுசீரமைப்புப் பணியைக் கணக்கில் எடுத்துக் கொண்டு களத்தில் வாளையும் கேடயத்தையும் சுழற்றிக் கொண்டு இருக்கிறது.

தி.மு.கழகத்தில் இன்றைய தோற்றத்தின் பின்னே திராவிடர்சங்கம், நீதிக்கட்சி, சுயமரியாதை இயக்கம், திராவிடர் கழகம் ஆகிய அமைப்புகளின் கொள்கை சாய்க்கால்கள் இருக்கின்றன. இந்தியாவில் இப்படியொரு அரசியல் கட்சியை-பிறிதொன்றை யாரும் சுட்டிக்காட்ட முடியாது. விவரம் தெரியாதவர்கள் விசாரித்துப் பார்க்க வேண்டிய நபர்கள் தற்காலிக கொக்கரிப்பால் தி.மு.க.வை அழித்துவிட முடியாது. அதன் வேர் ஆழமானது; விழுதுகள் உறுதியானவை.

தமிழகம் முழுமையும் உள்ள மூத்த கழக முன்னோடிகள் செயற்கரிய செய்ய வல்லவர்கள். அமைப்பின் சீரமைப்புப் பணியினை முன்னின்று ஆற்றுகிற பக்குவம் உள்ளவர்கள். இந்த அமைப்பு - தி.மு.க. வலுவாக இருக்க வேண்டும் என்பதில்பேரார்வம் உள்ளவர்கள். இது ஆயிரம் காலத்து பயிர் என்பதைப் பயின்று அரசியலுக்கு வந்தவர்கள். அவர்களின் உறுதுணை முழுமையாக மறுசீரமைப்புப் பணிகளுக்கு அமையும். ஆகவே நமக்கு 'ஐயமுண்டு; பயமில்லை!'

தி.மு.க. அழிக்கப்பட்டுவிடும்-அழியும் என்று அணுகுண்டு அய்யாவு காலத்திலிருந்து சொல்லிக் கொண்டு திரிபவர்கள் இன்னமும் இருக்கிறார்கள். இன்றும் ஆரூடம் பார்த்துக் கொண்டு இருக்கிறார்கள். அறிஞர் அண்ணா ஒரு முறை, 'தி.மு.கழகம் கண்ணீரோடு பிறந்தது, அது சாகும் போது சிரித்துக் கொண்டே சாகும்'! என்று கூறிச் சென்று இருக்கிறார்.

அவரின் அந்தமொழி உள்ளீடு நிறைந்தது. காலம் தீர்மானிக்க வேண்டிய நிகழ்வு அது. கத்துக் குட்டிகள் அல்ல. இருப்பினும் ஒன்றைச் சூத்திரமாக்கச் சொல்கிறேன்.

**என்று வைதீகம் வீழ்கிறதோ**
**என்று வர்ணாசிரமம் வீழ்கிறதோ**

**அன்று தி.மு.கழகம் இருக்காது. அதுவரை அதன் பணி தொடர்ந்து கொண்டே இருக்கும். அதனை அழிக்க முடியாது.**

**பகல் என்றும் இரவு என்றும்**
**பகுக்கும் கால யந்திரத்தைக்**
**கையில் வைத்திருக்கும்**
**வானத்தை**
**யார் கையில் இருந்தாலும்**
**குடையால் அகற்ற முடியாது.**
**நிசத்தைக் காட்டாமல்**
**நிழலைக் காட்டும் குடையா**
**நிசங்களின் தேசமான ஆகாயத்தை**
**நிர்மூலம் செய்ய நினைப்பது?**

**-ஈரோடு தமிழன்பன்**

# 'மிசா' காலக் கொடுமை வாழ்வு!

முதல்வரான பிறகும் சட்டசபையில் நடிப்பை
உடல்மொழியால் தொடர்கின்ற நடிகர்,
பழைய ஈக வரலாற்றை ஒருவகையில்
நினைவுபடுத்த வைத்துவிட்டார்.

அரசியலில் வளர்ந்தபிறகு ஒருவேளை நடிகர் உணரக்கூடும், "மு.க.ஸ்டாலின் மேல் கை வைத்தது எவ்வளவு பெரிய தவறு " என்று !

பொதுமக்களுக்குத் தி.மு.க.வினர் மேல் வருத்தம் இருக்கலாம். மு.க.ஸ்டாலின் மேல் அப்படி எந்த வருத்தமும் மக்களுக்கு இல்லை.

தளபதி மு.க.ஸ்டாலின் மிசாவில் கைதாகவில்லை எனத் தேன்கூட்டில் கைவைத்து விட்டார்கள். அவரின் மிசா காலச் சித்திரவதை வாழ்வைக் கொச்சைப்படுத்துவது அறியாமை .

நெருக்கடி நிலை (மிசா) கொடிய வரலாற்றைத் தெளிவு படுத்தும் நூல்களும் உண்டு ; நேரடிப் பாதிப்போடு நம்மோடு வாழ்பவர்களும் உண்டு.

நெருக்கடிநிலை 'மிசா' என்னும்
அன்றைய இருண்ட காலம் குறித்து,
ஒவ்வொருவருக்கும் வெவ்வேறு
நினைவுகளும் உண்டு.

நான் அப்போது சென்னை சைதாப்பேட்டை ஆசிரியர் கல்லூரியில் பயின்று கொண்டிருந்தேன். ஆசிரியர் கல்லூரிச் செயலராகவும் இருந்தேன்.

நான் கைதாகி விட்டதாகத் தவறாகக் கேள்விப்பட்டு , செந்தலை என்னும் தஞ்சை மாவட்டச் சிற்றூரிலிருந்து அலறிஅடித்து என்தந்தையார் ஓடிவந்ததெல்லாம் மறந்துபோன துயர வரலாறு.

நெருக்கடி நிலைக்கு எதிராக இருந்ததாகப் பேராசிரியர் ந.சஞ்சீவி, பேரா.இரா.கணேசன், புலவர் சரவணத்தமிழன், புலவர் பொன்னிவளவன், புலவர் ஆடலரசு முதலிய பலரும் பணிநீக்கம் செய்யப்பட்டார்கள்.

சித்திரவதைக்கு ஆளான உதகைத்தமிழரசன் ( தோழர் ஓவியாவின் தந்தை) முதலான கல்வித்துறையினர் பற்றியெல்லாம் பேச நூற்றுக்கணக்கான செய்திகள் உண்டு.

அவற்றை நினைவு படுத்தாததால் இந்த இருள் முகங்களின் மதமதப்புப் பேச்சுகளைக் கேட்கும் நிலை இன்று ஏற்பட்டுவிட்டது.

யார் நண்பர் , யார் உளவாளி என
அறியமுடியாத சூழல் அன்றைக்கு இருந்தது.

தி.மு.க. வேடம் போட்டுப் பலன்அனுபவித்த பலர், 'தேசிய ஆசிரியர் பேரவை' போன்ற புதிய புதிய வேடம் போட்டு நெருக்கடி நிலைக்கு வாழ்த்துப் பாடிய வரலாறெல்லாம் உண்டு.


இனியாவது அவற்றையெல்லாம் நினைவுபடுத்தத்தான் வேண்டும்.

தமிழ்நாட்டு அரசுவெளியீடான 'தமிழரசு' இதழில் ஸ்ரீ, ஸ்ரீமதி என வெளிப்படையாகப் பயன்படுத்தினார்கள் !

திராவிடம், தமிழ் எல்லாம் முடிவுக்கு வந்துவிட்டன என்பதைப்போல எத்தனையெத்தனைக் கொடுமைகளை ஆட்டம் போட வைத்தார்கள்.

இனியாவது எல்லாவற்றையும்
தூசிதட்டிக் காட்டவேண்டும்.

**செந்தலை**
**ந.கவுதமன்**
தலைவர், தி.மு.க.
கல்வியாளர் அணி



சட்டப் பேரவையில் முதலமைச்சரின் ஆணவப் பேச்சைக் கண்டித்து இன்று மாவட்டத் தலைநகரங்களில் ஆர்ப்பாட்டம்!

# விவசாயத் தொழிலாளர் அணியினர் பெருந்திரளாகப் பங்கேற்போம்!

## அணிச் செயலாளர் அன்னியூர் சிவா வேண்டுகோள்!

*சென்னை, செப். 12 -*

சட்டப் பேரவையில் முதலமைச்சரின் ஆணவப் பேச்சைக் கண்டித்து இன்று தி.மு.க. சார்பில் மாவட்டத் தலைநகரங்களில் நடைபெறும் ஆர்ப்பாட்டத்தில் விவசாயத் தொழிலாளர் அணியினர் திரளாகப் பங்கேற்றிடுமாறு அணிச் செயலாளர் அன்னியூர் சிவா கேட்டுக்கொண்டுள்ளார்.

இது குறித்து அவரது அறிக்கை வருமாறு:

சினிமா மோகம், கவர்ச்சி மூலமாக மக்களை மயக்கி, போலியான பிம்பத்தை சமூக ஊடகங்களின் மூலமாகக் கட்டமைத்து குழந்தைகளை ஏமாற்றி குடும்பத்துக்குள் குழப்பங் களை ஏற்படுத்தி - போலி வாக்குறுதிகள் அளித்து ஆட்சியைக் கைப்பற்றி அதுவும் ஆட்சி அமைக்கும் வலிமையைப் பெறமுடியாத மைனாரிட்டி நிலைமை என்பதால் தி.மு.க. கூட்டணியில் வென்றவர்களுக்கு அமைச்சர்கள் பொறுப்புகளைக் கொடுத்து அவர்களது ஆதரவைப் பெற்று அ.தி.மு.க. சார்பில் வென்றவர்களுக்கும் அமைச்சர் பதவி தருவதாக ஏமாற்றி குதிரை பேரம் நடத்தி, முதலமைச்சராகியிருக்கிறார் நடிகர் விஜய்.

மக்களுக்கு கொடுத்த வாக்குறுதிகளை நிறைவேற்றாத நிலையில் திராவிட மாடல் ஆட்சி மூலமாக கழகத் தலைவர் மு.க.ஸ்டாலின் அவர்களால் கொண்டுவரப்பட்ட திட்டங்களை நிறுத்தினார். நிறுத்த முடியாத திட்டங்களுக்கு பெயரை மாற்றி, ஸ்டிக்கர் ஒட்டும் வேலையைச் சிறப்பாகச் செய்து வருகிறார். கொலை கொள்ளை அதிகமாகி விட்டது. போதைப் பொருள் நடமாட்டமும் பாலியல் வன்முறையும் அதிக மாகி விட்டது. பல்வேறு குற்றச் செயல்களில் த.வெ.க. நிர்வாகிகளே சிக்கி வருகிறார்கள்.

அதற்கு எந்த நடவடிக்கையும் எடுக்காமல், அவர்களை பாதுகாக்கும் வேலையில் ஈடுபடுகிறார்கள். 'தெரியாமல் ஓட்டுப் போட்டு விட்டோம்' என்று மக்கள் வருந்திச் சொல்லி வருகிறார்கள்.

இதில் இருந்து திசை திருப்புவதற்காக தனது டயலாக் சூட்டிங் மேடையாக தமிழ்நாடு சட்டமன்றத்தை முதலமைச்சர் மாற்றி விட்டார். அரசியல் உலகில் அருவெறுப்பான உரையாற்றினார் சட்டமன்றத்தில் நிர்வாக திறமையற்ற, சோபா மாடல் அரசின் முதலமைச்சரின் ஆணவப் பேச்சைக் கண்டித்து மாவட்டத் தலைநகரங்களில் இன்று (12.09.2026 - சனிக்கிழமை) மாபெரும் ஆர்ப்பாட்டம் நடைபெறுகிறது.

இந்த கண்டன ஆர்ப்பாட்டத்தில் விவசாய தொழிலாளர் அணி மாவட்ட, ஒன்றிய, பகுதி, நகர, பேரூர் கழக அமைப்பாளர்கள், துணை அமைப்பாளர்கள் , கழக மூத்த முன்னோடிகள், கழக உடன்பிறப்புகள், இந்த மாபெரும் கண்டன ஆர்ப்பாட்டத்தில் கலந்து கொண்டு கண்டனத்தை பதிவு செய்திட வேண்டுமென விவசாய தொழிலாளர் அணி செயலாளர் அன்னியூர் சிவா கேட்டுக் கொண்டுள்ளார்.





பெருநகர சென்னை மாநகராட்சி அம்பத்தூர் மண்டலம் 7க்குட்பட்ட 87 வது வார்டில் மாவட்ட கழக செயலாளர் அண்ணன் திரு பி.கே. சேகர் பாபு அவர்களின் வழிகாட்டுதலின்படி தூய்மைப் பணியாளர்களுக்கான உடைமாற்றும் அறை மற்றும் ஓய்வு அறை ஆகியவற்றை பயன்பாட்டிற்கு திறந்து வைத்ததோடு குப்பை சேகரிக்கும் பணிக்கு மூன்று மின்சார ஆட்டோக்களை தலைமை பொதுக்குழு உறுப்பினரும் 87 வது வார்டு மாமன்ற உறுப்பினருமான டாக்டர் பூர்ணிமா வழங்கினார். உடன் 87 ஆவது வார்டுக்கு உட்பட்ட மாநகராட்சி அதிகாரிகள் இருந்தனர்.